மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது செங்கிப்பட்டியிலே இருக்கிற அந்த மருத்துவமனையில் போதுமான படுக்கைகள் இருக்கின்றன. படுக்கை இல்லையென்ற பெரிய குறை காண்பதற்கு அவசியம் இல்லை. மாறாக, நிர்வாகச் செலவுகளுக்கு நிலங்கள் மூலம் வருகின்ற வருமானத்தில் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறைபாட்டை நீக்கினால் மருத்துவமனை நன்றாக இயங்கும். மேலும் காச நோயாளிகளை நீண்ட நாட்களுக்குப் படுக்கையில் படுக்க வைத்து சிகிச்சை அளிக்காமல், சில வகையான ஆபரேஷன்கள் மூலம்—சர்ஜிகல் ஆபரேஷன்—சிகிச்சை அளித்தால் நோய் குணமாகிறது. அப்படி சர்ஜிகல் ஆபரேஷன் சிகிச்சை ஏற்படுமானால் அதற்கான முயற்சிகள் மருத்துவமனையின் நிர்வாகக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, இந்தக் காச நோய் மருத்துவமனை நிதி உதவியை மாநில அரசாங்கத்திடமிருந்து பெறுகிறதா? அல்லது, மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள விவரப்படி மாநில அரசிடமிருந்துதான் நிதி உதவி பெறுகிறது. மேலும், தனியார்கள் சிலர் நன்கொடையும் அளித்திருக்கிறார்கள். சிலர் நன்கொடையாக நிலம், சொத்துக்கள் முதலியவை எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் மூலமும் இந்த மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது.

*Provision of gratuity to Industrial workers*

* 536 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government received representation from Madurai on 4th April 1971 in respect of a legislation providing for gratuity to Industrial workers; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 4–4–1971-ல் பல தொழிற்சங்கங்களின் சார்பில், கேரளத்தில் இருப்பதுபோல கிராஜுடி சட்டம் தமிழகத்தில் கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, சென்னையில் 10–4–1970 அன்று நடந்த தென் மண்டலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் பணிக்கொடை நிதி ஒன்றை ஏற்படுத்த மத்திய சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்த அரசு கருத்து தெரிவித்தது. அப்போதுதான் நிறுவனத்தின் நிதிநிலை இடர்பாடுகள் காரணமாக தொழிலாளர்

1971 ஜூலை 29]

ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணிக்கொடை கொடுக்கப் படாமல் இருக்கும் நிலை உருவாகாது. கேரள அரசு அளித்து வருகின்றதைப்போல் தமிழக அரசு தருவதற்குப் பதிலாக, தனியாக ஒரு சட்டம் கொண்டுவரலாம் என்று எண்ணி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். விரைவில் பதில் வந்தால் அந்தச் சட்டத்தை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டுவர எண்ணியிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு நாமே ஒரு மசோதாவைத் தயாரித்து அனுப்பியிருக் கிறோம் என்று நினைக்கிறேன். அவர்கள் அதனை எத்தனை நாட்களுக் குள்ளாக அனுப்புவார்கள்? கன்கரண்ட் சாங்ஷன் வராமல் இருந்தால் சீக்கிரம் அனுப்ப முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அண்மையில் சென்னைக்கு வந்திருந்த மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் அவர்க ளிடமும் இதைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறேன். அண்மையில் நடை பெறவிருக்கும் மாநிலங்களின் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் கவனிப்பதாகக் கூறினார்கள். அந்த மாநாட்டில் வலி யுறுத்திச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சி எடுத்துக்கொள்வேன்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, இப்போதே பல தொழிற்சாலைகளில் கிராஜுடி திட்டம் இருக்கிறது. சில இடங் களில் இல்லாமல் இருக்கிறது. இல்லாத இடங்களில் விரைவிலே கொண்டுவர முயற்சிகளை இந்த அரசு எடுக்குமா? எல்லாத் தொழிற்சாலைகளிலும் கொண்டுவர என்ன முயற்சியை மேற் கொள்ளும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கிராஜுடி சட்டத்தை எவ்வளவு விரைவில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு விரைவில் கொண்டுவர அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

Dr. H. V. Hande : A number of industries are run by State Government, Central Government and quasi-Government and they all come within the purview of State subject. May I know from the Hon. Minister whether arrangements had been made in these industries run by Central Government, State Government and quasi-Government bodies to see that gratuity is paid to all workers?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, சட்டத்தை நிறைவேற்றும்போது கனம் உறுப்பினர் டாக்டர் ஹாண்டேயின் கருத்து பரிசீலனை செய்யப்படும்.

*Pearl fishing*

*537 Q.—Thiru N. K. Palanisami : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government has taken steps to improve pearl fishing; and

(b) if so, the details of the same?